**கவனிக்க.**- *2009.11.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1629 - 2009 නොවැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2009.11.20**

*1629 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1686 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1690 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*



CERTIFIED
DIGITAL

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## வர்த்தக, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சு

இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகம்

**தரவுப் பதிவு இயக்குநர் பதவி** (Data Entry Operator)

இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தில் நிலவும் மேற்குறிப்பிடப்பட்ட வெற்றிடத்திற்குத் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் கடைசிப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க ஏ4 தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2009, திசெம்பர் 4 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர், "பணிப்பாளர் மாஅதிபதி, இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகம், 'சமாகம் மெதுர', 3 ஆவது மாடி, டீ. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக, பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க தயாரிக்கப்படாத அல்லது முடிவுத் திகதிக்குப் பின் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தரவுப் பதிவு இயக்குநர் பதவி" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

1. **பதவி**.- ஆவணங்கள் மற்றும் தரவு உதவியாளர் (பதவி எண்ணிக்கை – 01).

2. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**.- (அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல், சிங்களம்/தமிழ் மொழி அல்லது இலக்கியம், கணிதம், ஆங்கில மொழி மற்றும் இரசாயனவியல்/உயிரியல்/பௌதீகவியல் உள்ளிட்ட 5 திறமைச்சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி (ஒரு அமர்வில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்)

அல்லது

(ஆ) கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம், சிங்களம்/தமிழ் மொழி, விஞ்ஞானம், ஆங்கிலம் உள்ளிட்ட 5 பாடங்களில் திறமைச்சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி (ஒரு அமர்வில் 5 பாடங்களில் சித்தி)

அல்லது

(இ) கல்விப் பொதுத்தராதர (சா./த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கில மொழி உட்பட 05 பாடங்களில் ஏ அல்லது பீ சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி.

3. **தொழில்சார் அறிவும் தேர்ச்சிகளும்**.- (அ) அங்கீகாரம்பெற்ற நிறுவனமொன்றில் 6 மாதத்திற்குக் குறையாத கால கணனி கற்கைநெறியொன்றைப் பூர்த்திசெய்திருத்தல். இக்கற்கைநெறி சமகால கணனி இயக்கும் முறைமைகளை (operating systems) உள்ளடக்கியிருத்தல் வேண்டும் (உ-ம் : வேட் புரசசிங், ஸ்பிரட் சீட், டேடா பேஸ்)

மற்றும்

(ஆ) அங்கீகாரம்பெற்ற ஒரு நிறுவனத்தில் 6 மாதங்கள் தரவுப் பதிவு இயக்குநராக பணியாற்றிய அனுபவம்.

4. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 13,120-10X145-11X-170-10X240-10X320-ரூபா 22,040.
(பொது நிருவாக சுற்றறிக்கை இல.: 06/2006-iv இணங்க)

5. **வயது எல்லை**.- 18 வயது-40 வயது.

6. **தொழில் நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையது மாகும். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி விதவைகள்/ விதுரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ii) இந்நியமனம் 3 வருட தகுதிநிலைகாண் காலத்திற்கு உட்படும்.

7. **சேவை நிபந்தனைகள்**.- தாபனக் கோவையின் ii ஆம் அத்தியாயத்தின் 10 தொடக்கம் 12 வரையுள்ள வாசகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாயிருக்கும்.

8. **ஆட்சேர்ப்பு முறை**.- விண்ணப்பங்கள் அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் கோரப்படும். பொது நிருவாக சுற்றறிக்கை 15/90 இற்கிணங்க தொழில்சார் பரீட்சை நடாத்தப்படுவதுடன் அதனைத் தொடர்ந்து முறைப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை இடம்பெறும். தொழில்சார் பரீட்சையில் 50% புள்ளியினைப் பெறுபவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தொழில்சார் பரீட்சை மற்றும் முறைப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படுவர்.

டி. எம். கருணாரத்ன,
புலமைச்சொத்துப் பணிப்பாளர் மாஅதிபதி,
இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகம்.

இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகம்,
கொழும்பு,
2009, நவெம்பர் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

**இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகம்**

தரவுப் பதிவு இயக்குநர் பதவி (Data Entry Operator)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர்- திரு./திருமதி/செல்வி : ----.
   (ஆ) முழுப்பெயர் :----.
2. (அ) நிரந்தர முகவரி :----.
   (ஆ) அஞ்சல் முகவரி :----.
3. (i) பிறந்த திகதி :-

   ஆண்டு : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

   (ii) 2009.12.04 ஆந் திகதியில் வயது :

   வருடங்கள் : [ ][ ] மாதங்கள் : [ ][ ] நாட்கள் : [ ][ ]

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. பால் :
(பெண் - 1/ ஆண் - 0)

6. திருமணமானவரா/திருமணமாகாதவரா ? :----.

7. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா. த.)

சுட்டெண் ----, ஆண்டு ----, மொழிமூலம் ----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. ...................................... | ......................... |
| 2. ...................................... | ......................... |
| 3. ...................................... | ......................... |
| 4. ...................................... | ......................... |
| 5. ...................................... | ......................... |
| 6. ...................................... | ......................... |
| 7. ...................................... | ......................... |
| 8. ...................................... | ......................... |
| 9. ...................................... | ......................... |
| 10. ...................................... | ......................... |
| 11. ...................................... | ......................... |
| 12. ...................................... | ......................... |

8. தொழில்சார் தகைமைகள் :

| கற்கைநெறி | பாடங்கள் | நிறுவனம் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |

9. தொழில் அனுபவம் :---------------------------------------.

10. தற்போதைய தொழில் விபரம் :
(அ) பதவி மற்றும் வகுப்பு/தரம் :----.
(ஆ) நியமனத் திகதியும் நிறுவனமும் :----.
(இ) ஓய்வூதியம் உரித்துடையதா/இல்லையா ? :----.
(ஈ) தற்போதைய வருடாந்த திரண்ட சம்பளமும் தற்போதைய சம்பள நிலையும் :----.

மேற்கூறப்பட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என நான் உறுதிமொழிகின்றேன். மேற்கூறப்பட்ட விடயங்கள் செம்மையற்றதாக அல்லது பிழை என காணுமிடத்து மேற்குறித்த பதவிக்கு பொருத்தமற்றவனாகக் கருதப்படுவேன் என்பதனையும் நியமனத்தின் பின்பு அத்தகைய பிழைகள் உறுதிப்படுத்தப் படுமிடத்து எந்தவித இழப்பீடுமின்றி சேவையிலிருந்து நிறுத்தப்படுவேன் என்பதனையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **அரச/மாகாண சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கான திணைக்கள/நிறுவனத் தலைவரின் விதப்புரை :**

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ........................................................ இவ் அமைச்சு/ திணைக்களம்/ நிறுவனத்தில், நிரந்தர/ தற்காலிக/ அமைய/ பயிலுநராக தற்போது பணியாற்றுகின்றார் என்பதனையும் அவர் (எச்சரிக்கை தவிர்ந்த) எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் உட்படவில்லை என்பதுடன் அவர் தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் விடுவிக்கப்படுவார்/ விடுவிக்கப்பட மாட்டார் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின்
கையொப்பம் (அலுவலக முத்திரை).

பதவி :----.
அமைச்சு/திணைக்களம்/நிறுவனம் :----.
திகதி :----.

11-480

---

## மக்கள் சபைச் செயலாளர்கள் பதவிக்கு ஆட்சேர்த்தல்

பாசம் நிறைந்த குடும்பமொன்று, சுபீட்சமான கிராமமொன்று, ஒழுக்கப் பண்பாடு, சுதந்திரமான சமூகமொன்று மற்றும் தர்மத்தை மதிக்கும் நாடொன்றை உருவாக்குவதனை நோக்காகக் கொண்டு, அந்த நோக்கினைச் சாத்தியப்படுத்திக்கொள்வதன் பொருட்டு பரவலான சமூக பங்கேற்பைப் பெற்றுக்கொள்வதன் பொருட்டும் அரசாங்கத்தின் தீர்மானமெடுக்கும் நடைமுறைகளின்போதும், அதனை நடைமுறைப்படுத்தும் போதும், அபிவிருத்தியின் பயன்களைப் பகிர்ந்து கொள்ளும் போதும் பரவலாக பொது மக்களின் பங்கேற்பை பெற்றுக் கொள்வதன் பொருட்டு கிராமிய மட்டத்தில் சகல சமூக இயக்கங்களையும் ஒன்றிணைக்கக் கூடிய ''மக்கள் சபைச் செயலகம்'' முறையொன்றை அறிமுகம் செய்து கிராமத்துக்கு வழங்கப்படும் அரச சேவைகளை வினைத்திறன் கொண்டதாக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று அரசாங்கத்தினால் கண்டறியப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2009.11.04 ஆந் திகதியன்று அமைச்சரவையினால் இந்த நிகழ்ச்சித் திட்டம் முறையாகப் பேணப்படுவதனை நோக்காகக் கொண்டு தற்போது நடைமுறையிலுள்ள ''மக்கள் சபை'' மீளமைக்கப்பட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவு ஒன்று அல்லது சிலவற்றை அளாவும் வகையில் மீளத்தாபிப்பதற்கும், அதன் நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதன் நிமித்தம் ''மக்கள் சபைச் செயலாளர்'' எனும் பெயரில் பதவியொன்றை உருவாக்கி அதற்கு பட்டதாரியொருவரை நியமிப்ப தற்கும், கொள்கை ரீதியான தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் இந்த மக்கள் சபைச் செயலாளர் பதவிக்கு வேலையற்ற பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அந்த விண்ணப்பப் படிவம் கீழ்க்காணும் அறிவுரைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு 2009.12.18 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் ''செயலாளர், நாட்டைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, இல. 177, காலி வீதி, கொழும்பு 03'' எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்படுகின்றது.

பூர்த்தி செய்யப்படாத மற்றும்/அல்லது தாமதமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

## மக்கள் சபைச் செயலாளர் பதவிக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2009

1.1 மக்கள் சபைச் செயலாளர் பதவிக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டு தகைமை பெற்ற இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

1.2 நாட்டைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு மூலம் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அமைவாக திறமை அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் மக்கள் சபைச் செயலாளர் பதவிக்கு நியமிப்பதற்குத் தெரிவு செய்யப்படுவர்.

1.3 நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி என்பன நியமிப்பு அதிகாரியினால் நிச்சயிக்கப் படும்.

1.4 சம்பளம்.- இலக்கம் 06/2004 (IV) - 2007.08.24 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைவாக உரித்துடைய மாதாந்த சம்பள அளவு - MN-4-2006 (ஏ) - ரூ. 15,215-10 x 215-4 x 240-7 x 320-15 x 360- ரூபா 25,965.

1.5 வினைத்திறமை காண் தடை :

| | |
|---|---|
| 1 ஆம் வினைத்திறமை காண் தடை | பதவிக்கு நியமிக்கப்பட்டு 3 வருட காலப்பகுதிக்குள் |
| 2 ஆம் வினைத்திறமை காண் தடை | இரண்டாம் தரத்திற்கு உயர்வு பெற்று 3 வருட காலப்பகுதிக் குள் |

1.6 இப்பதவி நிரந்தரமானது ; ஓய்வூதிய உரித்துடையது ; விதவைகள் அநாதைகள் /தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

1.7 **தகைமைகள்**.- மக்கள் சபைச் செயலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கீழ்க்காணும் தகைமைகள் உரித்துடையதாகும் :-

(அ) இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியன்று 22 - 35 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும் ;

(இ) 2009.11.01 ஆந் திகதிக்கு முன்னதாக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கை பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்று பெற்றிருத்தல் வேண்டும் ;

(ஈ) நற்பிரசையாக இருத்தல் வேண்டும்.

1.8 **தொழில்சார் மற்றும் ஏனைய தகைமைகள்**.- தமது கிராம பிரதேசத்தில் சமூக ரீதியான நடவடிக்கைகள் மற்றும் நிறுவனங்களில் பதவி வகித்தல், செயற்பாட்டு அங்கத்துவம் வகித்தல்.

1.9 மக்கள் செயலாளர் பதவிக்கு ஆட்சேர்க்கும் பொழுது, மக்கள் சபை அதிகார எல்லைக்குள் வதிபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (விண்ணப்பதாரிகள் தாம் வதியும் மக்கள் சபை அதிகார எல்லை /கிராம உத்தியோகத்தர் பகுதியை உறுதிப் படுத்துவதற்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று ஏறத்தாழ 3 வருட வாக்காளர் பெயர் பட்டியல் மற்றும் பிரதேச செயலாளரினால் துணை கையொப்பமிடப்பட்ட கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்).

1.10 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கும் முறை :-

| | |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | உச்ச புள்ளி 40 |
| கருத்திட்டங்கள் தயாரிக்கும் திறமை | உச்ச புள்ளி 40 |
| ஏனைய தகைமைகள் | உச்ச புள்ளி 15 |
| நேர்முகப்பரீட்சை | உச்ச புள்ளி 05 |
| மொத்தப்புள்ளி | புள்ளிகள் 100 |

1.11 **விண்ணப்பங்கள் தயாரிப்பதற்கான அறிவுரை** :

(அ) ஏ 4 (செ.மீ. 21x29) அளவிலான கடதாசியைப் பயன்படுத்தித் தயாரிக்கவும்.

(ஆ) இலக்கம் 01 தொடக்கம் 09 வரை பந்திகள் முதலாவது பக்கத்திலும்,

(இ) இலக்கம் 10 தொடக்கம் இறுதி வரை மறுபக்கத்திலும் உள்ளதாக விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஈ) நீங்கள் வதியும் மக்கள் சபை அதிகார பரப்பு எல்லைக்குட்பட்ட மக்களை பலமூட்டுவதற்கான பிரயோக செயற்பாட்டு நடைமுறைகள் உள்ளடங்கிய நிச்சியக்கப்பட்ட இலக்கைக் கொண்ட 1000 - 1500 வசனங்களுக்கு இடையிலான கருத்திட்டம் ஒன்றை சுயமாகத் தயாரித்து விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

(உ) விண்ணப்பப்படிவம் இடப்பட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மக்கள் சபைச் செயலாளர் பதவிக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் - 2009" (பிரதேச செயலாளர் பிரிவு/ கிராம உத்தியோகத்தர் பிரிவு/ இலக்கம்) எனக் குறிப்பிடவும்.

(ஊ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், வர்த்தமானிப் பிரசுரம் பெற்ற பொலிஸ் சேவை உத்தியோகத்த ரொருவர், வருடாந்த சம்பளம் ரூபா 2,40,360 அல்லது

அதனை விடக் கூடிய அரசாங்க நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

டபிள்யூ. கே. கே. குமாரசிறி,
செயலாளர்,
தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும்
தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு.

தேசத்ததைக் கட்டியெழுப்புதல் மற்றும்
தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு,
இல: 177, காலி வீதி,
கொழும்பு 03,

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மக்கள் சபைச் செயலாளர் பதவிக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2009**

☐

(அலுவலக உபயோகத்துக்காக)

1. பெயர் (கீழே (i), (ii) மற்றும் (iii) ஒரு கூட்டுக்கு ஒரு எழுத்தாக வரும் விதத்தில் கட்டாயமாக ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்) :

(i) முழுப் பெயர் :

(ii) முதல் எழுத்துக்களுடன் பெயர் :

(iii) விவாகத்துக்கு முன் பெயர் (இருப்பின்)

2. (i) நிரந்தர முகவரி : ..........................................................
(ii) அஞ்சல் முகவரி : ..........................................................

3. தொலைபேசி இலக்கம் : ..........................................................

4. இலங்கைப் பிரசையா ?
ஆம் ☐
இல்லை ☐

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

6. பால் (ஆண் /பெண்) :
பெண் ☐ ஆண் ☐

7. விவாகமானவரா/விவாகமாகாதவரா?
விவாகமானவர் ☐ விவாகமாகாதவர் ☐
(உரிய கூட்டிற்குள் புள்ளடி (X) இடவும்)

8. பிறந்த திகதி :
ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

9. மாவட்டம் :..........................................................
10. பிரதேச செயலகப் பிரிவு :..........................................................
11. கிராம உத்தியோகத்தர் பிரிவு : ..........................................................
12. உயர் கல்வி தகைமைகள் பற்றிய விபரம் : (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)
(அ) பல்கலைக்கழகம் :..........................................................
(ஆ) பட்டம் பெற்ற வருடம் :..........................................................
(இ) பட்டம் :..........................................................
(ஈ) வகுப்பு சித்தி பெற்றிருப்பின் அது பற்றிய விபரம் குறிப்பிடவும் :..........................................................
(உ) கல்வித் துறை : ..........................................................
(ஊ) விசேடத்துவம் பெற்ற துறை : ..........................................................
(எ) மொழி : ..........................................................
(ஏ) பட்டப் பின் படிப்பு தகைமைகள் பெற்றிருப்பின் அதனை குறிப்பிடவும் :......................
(ஒ) தொழில் ரீதியான தகைமைகள் பெற்றிருப்பின் அதனை குறிப்பிடவும் : ......................
(ஓ) ஏனைய தகைமைகள் இருப்பின் அதனைக் குறிப்பிடவும் : ..........................................

13. மொழித் தேர்ச்சி

| மொழி | அதிதிறமை | திறமை | சாதாரணம் |
|---|---|---|---|
| சிங்களம் | | | |
| தமிழ் | | | |
| ஆங்கிலம் | | | |
| பிற | | | |

14. ஏனைய விசேட திறமைகள், ஆற்றல்கள் இருப்பின் அதுபற்றிய விபரம் : ..........................................................
..........................................................
..........................................................

15. கணனிப் பாவனையில் தேர்ச்சி பெற்றுள்ளீரா?
ஆம் ☐ இல்லை ☐
பெற்றிருப்பின் அது பற்றிய விபரம் குறிப்பிடவும்.

16. பாடசாலையில் மற்றும் பல்கலைக்கழகத்தில் மானியம், பரிசில்கள், புலமைப்பரிசில் ஆகியவை பெற்றிருப்பின் குறிப்பிடவும் :...........
..........................................................
..........................................................

17. நீர் தற்பொழுது உம்முடைய கிராமத்தில் /பிரதேசத்தில் உள்ள பொது சங்கங்கள் சமாசங்கள், சமூக கழகங்கள் ஆகிய நிறுவனங்களில் பதவி அல்லது அங்கத்துவம் உடையவரா?
ஆம் ☐ இல்லை ☐

பதில் ஆம் எனின் அது பற்றிய விபரம் :

| சங்கம் /சமாசம் /கழகம் | வகிக்கும் பதவி | காலம் |
|---|---|---|
| | | |

18. தற்போது தொழில் புரிபவரா ? (அவ்வாறெனின்)

(i) தொழில் தருனரின் பெயர் மற்றும் முகவரி : ....................
........................................................................................

(ii) தற்போது வகிக்கும் பதவி மற்றும் அதன் தன்மை (நிரந்தரம், அமைய, தற்காலிகம், ஒப்பந்தம்) : ....................................

(iii) கடமையின் தன்மை : ......................................................

(iv) நியமனத் திகதி : ............................................................

(v) மாதாந்த சம்பளம் :.........................................................

19. ஏதேனும் தண்டனைக்குரிய குற்றமொன்றுக்கு நீதிமன்றத்தினால் நீர் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா?

ஆம் ☐

இல்லை ☐

என்னால் மேலே சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என சான்றுபடுத்துவதுடன், என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானது என உறுதிப் படுத்தப்பட்டால் அதன் பின்னர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது பதவியில் இருந்து அகற்றப்படுவதற்கு உள்ளாக்கப்படுவேன் என்பதையும் நான் அறிந்துள்ளேன்.

......................................................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :......................................

**விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர் எனது முன்னிலையில் ................................ ஆம் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

.............................................................,
கையொப்பத்தைச் சான்றுபடுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

சான்றுபடுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ....................
பதவி : ..................................................................................
முகவரி : ..............................................................................
(உத்தியோக முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)
திகதி : ................................

11-835

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத மேற்பார்வையாளர் முகாமைத்துவ சேவையின் II 'ஆ' தரத்திற்கு - நிரந்தரப் பாதை பரிசோதகர், கட்டிட பரிசோதகர், பாலம் பரிசோதகர், சமிக்ஞை தொலைத்தொடர்பு பரிசோதகர், இயக்கத்தள போர்மன், இயந்திர போர்மன் போன்ற பதவிகளுக்கு வெளி விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூல திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

இத்திணைக்களத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பதவிகளினதும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வேண்டி 2009.12.11 ஆந் திகதியன்று வயது வருடம் 21 க்குக் கூடிய 30 க்கு கூடாத (தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.) இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2009.12.11 ஆகும். சகல விண்ணப்பங்களும் அத்தினத்திற்கு முன்பு புகையிரத முகாமையாளருக்குக் கிடைக்கக்கூடியவாறு "புகையிரத பொது முகாமையாளர், புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம், த. பெ. இலக்கம் 355, கொழும்பு 10" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் தனிப்பட்ட பெயருக்கோ அல்லது கையில் கொண்டு வந்து பாரம் கொடுப்பதற்கோ முடியாது. பூரணமற்ற, முறையற்ற, அவசிய தராதரங்களை கொண்டிராத விண்ணப்பங்கள் யாவும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்பத்திரத்தை தாம் கடமை புரியும் நிறுவனத்தின் சேவைப் பிரதானியின் ஊடாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்பு அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. **விண்ணப்பம் கோரப்படும் பதவிகள்**.- நிரந்தர பாதை பரிசோதகர், கட்டிட பரிசோதகர், பாலம் பரிசோதகர், சமிக்ஞை தொலைத்தொடர்பு பரிசோதகர், இயக்கத்தள போர்மன், இயந்திர போர்மன்.

*2.* **ஒவ்வொரு பதவிகளின் கடமைகளும் அதன் தன்மையும்.**- (அ) *நிரந்தரப் பாதை பரிசோதகர்.*- புகையிரத போக்குவரத்திற்கு உகந்த வகையில் புகையிரத பாதை முறையை புதிதாக நிர்மாணித்தல், பழுதுபார்த்தல், புனரமைப்பு செய்தல், வேலைகள் மேற்கொள்ளும் போது வேலை மேற்பார்வையாளரின் கடமைகளை மேற்கொள்ளல்.

(ஆ) *கட்டிட பரிசோதகர்.*- கட்டிடங்களை புதிதாக நிர்மாணித்தல், பழுதுபார்த்தல், புனரமைப்புச் செய்தல், வேலைகள் மேற்கொள்ளும் போது வேலை மேற்பார்வையாளரின் கடமைகளை மேற்கொள்ளல்.

(இ) *பாலம் பரிசோதகர்.*- புகையிரத பாதை அமைப்பிலுள்ள சகல பாலங்களையும் புதிதாக நிர்மாணித்தல், பழுதுபார்த்தல், புனரமைப்புச் செய்தல், பேணுகையின்போது வேலை மேற்பார்வையாளரின் கடமைகளை மேற்கொள்ளல்.

(ஈ) *சமிக்ஞை தொலைத்தொடர்பு பரிசோதகர்.*- புகையிரத போக்குவரத்திற்கு உகந்த வகையில் புகையிரத சமிக்கை அமைப்பையும் தொலைத்தொடர்பு அமைப்பையும் புதிதாக நிர்மாணித்தல், பழுதுபார்த்தல், புனரமைப்புச் செய்தல், பேணுகையின்போது வேலை மேற்பார்வையாளரின் கடமைகளை மேற்கொள்ளல்.

(உ) *இயக்கத்தள போர்மன்.*- புகையிரத என்ஜின், பெட்டி, பெட்டிகளில் ஏற்படும் தொழில்நுட்ப குறைபாடுகளை கண்டறிந்து அவற்றைப் பழுதுபார்த்தல், பேணுகையின்போது வேலை மேற்பார்வையாளரின் கடமைகளை மேற்கொள்ளல்.

(ஊ) *இயந்திர போர்மன்.*- புகையிரத போக்குவரத்திற்கு உகந்த வகையில் புகையிரத என்ஜின், பயணிகள் பெட்டி, பொருட்கள் பெட்டிகள் அடங்கலாக இயந்திர உபகரணங்களை பழுதுபார்த்தல், தேவையான மேலதிக உதிரிப்பாகங்கள் உற்பத்தி செய்தல், பராமரித்தல், பேணுகையின்போது வேலை மேற்பார்வையாளரின் கடமைகளை மேற்கொள்ளல்.

*3.* **சம்பள அளவுத்திட்டம்.**- (அ. நி. சு. 06/2006 (iv) இற்கு அமைய)- II 'ஆ' வகுப்பு : (எம்என்-3-2006- A) : ரூபா 15,005 - 4 x 180 -14 x 240 - ரூபா 19,085.

*4.* **கல்வித் தராதரம்.**- புகையிரத மேற்பார்வையாளர் முகாமைத்துவ சேவையின் II 'ஆ' தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்காக வேண்டி க. பொ. த. (சா./தரம்) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞான பாடத்துடன் இன்னுமோர் பாடத்தில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு சித்தியடைந் திருத்தல் வேண்டும் ;

உடன்

பழைய பாடத்திட்டத்தின்படி தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் போன்ற விஞ்ஞான பாடங்களில் இரு பாடங்கள் உட்பட 03 பாடங்களில்

அல்லது

புதிய பாடத்திட்டத்தின்படி இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் போன்ற விஞ்ஞான பாடங்களில் இரு பாடங்கள் உட்பட 03 பாடங்களில் ஒரே தடவையில் க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

உடன்

மேற்கூறப்பட்ட அடிப்படை தராதரத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைக்கு ஏற்புடைய டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும். (நிரந்தரப் பாதை பரிசோதகர்/கட்டிட பரிசோதகர்/ பாலம் பரிசோதகர் போன்ற பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் சிவில் டிப்ளோமா உள்ளவர்களாகவும், இயக்கத்தள போர்மன்/இயந்திர போர்மன் போன்ற பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் இயந்திர அல்லது மின் டிப்ளோமா உடையவர்களாகவும், சமிக்கை தொலைத்தொடர்பு பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் மின் அல்லது இலக்ரோனிக் டிப்ளோமா உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்) :-

(i) மொறட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

(ii) தேசிய பயிலுனர் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியலாளர் டிப்ளோமா ;

(iii) கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியலாளர் டிப்ளோமா ;

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்திற்கு முன்பு இத்தராதரத்தை பூரணப்படுத்தியுள்ளதாக சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

*5.* **ஆட்சேர்ப்பு முறை.**- மேலுள்ள (04) இல் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் திறந்த எழுத்துமூல போட்டிப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு திறமையின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

*6.* **ஆட்சேர்ப்பு பரீட்சையின் பரீட்சை விபரம்.**- (i) இப்பரீட்சை தொழில்நுட்ப சேவை சபையின் மேற்பார்வையின்கீழ் பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும்.

(ii) *பரீட்சை முறை :*

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) சகல கேள்வித்தாள்களுக்கும் விடையளிக்க வேண்டியது மேலுள்ள 04 இன் கீழ் தராதரத்தைப் பெற்றுள்ள மொழி மூலமாகும்.

(iii) *பரீட்சை விடயம் :*

(அ) நுண்ணறிவு
(ஆ) தொழில்நுட்ப கேள்வித்தாள்

***பரீட்சை உள்ளடக்கம் :***

(அ) *நுண்ணறிவு* : (காலம் 01 மணி- முழுப்புள்ளி 100).- விண்ணப்பதாரியின் புரிந்துகொள்ளும் ஆற்றலையும், தர்க்க ரீதியான கூர்மையான அறிவையும், திடீரென சரியான தீர்மானம் எடுக்கும் ஆற்றலையும், மதிப்பீடு செய்யும் ஆற்றலையும், எண்கணித முறையிலுள்ள பிரச்சினைகள், மொழிக்கூற்று அட்டவணை, வரைபடம் போன்றவற்றை பயன்படுத்தி நுண்ணறிவு கேள்வித்தாள் தயாரிக்கப்படும்.

(ஆ) *தொழில்நுட்ப கேள்வித்தாள் (காலம் : 03 மணி - முழுப்புள்ளி 100)*

ஆட்சேர்ப்பு செய்யும் தராதரங்களாக குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களையும் டிப்ளோமா சான்றிதழ் அல்லது சமமான சான்றிதழ் உள்ள ஒருவரிடம் உள்ள தொழில்நுட்ப அறிவு மட்டத்தையும், நிர்மாணிப்பு, பராமரிப்பு நடவடிக்கைகளின்போது நவீன இயந்திரங்களின் பாவனை சம்பந்தமான அறிவையும் பரிசீலிக்கும் முறையிலான கேள்விகளை உள்ளடக்கியதாக இருக்கும். இக்கேள்வித்தாளுக்குரிய விடய உள்ளடக்கம் ஒவ்வொரு பதவிக்கும் வேறுபட்டதாக இருப்பதுடன் விண்ணப்பிக்கும் பதவிக்குரிய விடய உள்ளடக்கத்தின்கீழ் தோற்ற அவ்விண்ணப்பதாரி நிர்பந்திக்கப்படுவார். ஒவ்வொரு பதவிக்குரிய விடய உள்ளடக்கம் கீழுள்ளவாறு அமையும் :

*நிரந்தரப்பாதை பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு.-* புகையிரத பாதை நிர்மாணிப்பு முறை, புகையிரத பாதை நிர்மாணிப்புகளுக்கான நவீன இயந்திர பாவனை, புகையிரத பாதை நிர்மாணிப்புகளுக்கான தளக்கோள வரைபடம் தயாரித்தல், வாசித்து புரிந்துகொள்ளும் ஆற்றல் போன்ற காரணிகளும் அவை சம்பந்தமான ஆற்றலை அளவிடும் வகையில் அமையப்பெற்ற கேள்விகளையும் உள்ளடக்கியதாக காணப்படும்.

*பாலம் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு.-* புகையிரத பாலம் நிர்மாணிப்பு முறை, புகையிரத பாலம் நிர்மாணிப்புகளுக்கான நவீன இயந்திர பாவனை, புகையிரத பாலம் நிர்மாணிப்புகளுக்கான தளக்கோள வரைபடம் தயாரித்தல், வாசித்து புரிந்துகொள்ளும் ஆற்றல் போன்ற காரணிகளும் அவை சம்பந்தமான ஆற்றலை அளவிடும் வகையில் அமையப்பெற்ற கேள்விகளை உள்ளடக்கியதாக காணப்படும்.

*கட்டிட பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு.-* புகையிரத கட்டிட நிர்மாணிப்பு சம்பந்தமாகவுள்ள அறிவு, கட்டிட நிர்மாணிப்புகளின்போது நவீன இயந்திர பாவனை, கட்டிட பழுதுபார்ப்புகளுக்கான செலவுகளை மதிப்பீடு செய்யும் ஆற்றல் போன்ற காரணிகளை உள்ளடக்கிய செயற்பாட்டு நடவடிக்கை சம்பந்தமான ஆற்றலை அளவிடும் வகையில் அமையப்பெற்ற கேள்விகளை உள்ளடக்கியதாகக் காணப்படும்.

*சமிக்கை தொலைத்தொடர்பு பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு.-* இயந்திர சமிக்கை முறை, மின் சமிக்கை முறை சம்பந்தப்பட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளையும் ஆற்றலையும் அளவிடும் வகையில் அமையப்பெற்ற கேள்விகளை உள்ளடக்கியதாக காணப்படும்.

*இயந்திர போர்மன் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு.-* புகையிரத என்ஜின், பயணிகள் பெட்டி, பொருட்கள் பெட்டிகள் அடங்கலாக ஏனைய இயந்திர உபகரணங்களின் குளறுபாடுகளை பழுதுபார்த்து செயற்படச் செய்தல் போன்ற தொழிற்பாட்டு அறிவை மதிப்பீடு செய்யும் வகையில் அமையப்பெற்ற கேள்வித்தாளாகும்.

*இயக்கத்தள போர்மன் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு.-* புகையிரத என்ஜின், பவர்செட் போன்றவற்றின் செயற்பாடு குளறுபாடுகளை கண்டறிதல், கண்டறிந்த குளறுபாடுகளை பழுதுபார்த்து செயற்படச் செய்தல் போன்ற தொழிற்பாட்டு அறிவை மதிப்பீடு செய்யும் வகையில் அமையப்பெற்ற கேள்வித்தாளாகும்.

*தேர்ந்தெடுக்கப்படும் முறை.-* சித்தியடைவதற்காக ஒவ்வொரு விடயத்திலும் குறைந்தது 40% புள்ளிகளை அல்லது அதற்கு கூடுதலாக பெற்றுக்கொள்ள வேண்டும். இரு விடயங்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த விண்ணபதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தராதரங்கள் பரிசீலனை செய்யப்படும். இந்த நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது. அவசிய தராதரங்களை பூரணப்படுத்தியவர்கள் மத்தியில் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட ஒழுங்கின் படி, நடைமுறை வெற்றிடங்களுக்கு ஏற்ப II ஆம் வகுப்பு 'ஆ' தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

**7. விண்ணப்பப்பப்படிவத்தை தயாரிப்பதற்கும் பூரணப் படுத்துவதற்குமான அறிவுறுத்தல்கள்.-** (i) விண்ணப்பப்பத்திரத்தை ஏ4 (தட்டச்சு கடதாசி) அளவுள்ள கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தின் .............. 1 ஆம் பக்கத்தில் (அ) பகுதியின் (1) இலிருந்து (9) வரையான தகவல்களும் 2 ஆம் பக்கத்தில் (ஆ) பகுதியின் (1) இலிருந்து (3) வரையான தகவல்களும் 3 ஆம் பக்கத்தில் (இ) பகுதியின் (3) (iv) இலிருந்து (இ) பகுதியின் (1) (ஈ) வரையான தகவல்களும் 4 ஆம் பக்கத்தில் விண்ணப்பத்தை உறுதிப்படுத்தலும் நிறுவன பிரதானியின் உறுதிப்படுத்தலும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

(ii) ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு பதவிக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியுமாகும். அத்தேர்ந்தெடுப்புக்காக இவ்வறிவித்தலின் (1), (2), (3), (4), (5) ஆம் பந்திகளை நன்றாக வாசித்து புரிந்துகொள்ளவும்.

(iii) எக்காரணத்தைக் கொண்டும் தேர்ந்தெடுக்கப்படும் பதவியை மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

(iv) பரீட்சைக் கட்டணம் ரூபா 250 ஆகும். அதை வசதியான தபால் அலுவலகத்தில் செலுத்தி, "புகையிரத பொது முகாமையாளர் எனும் பெயருக்கு மாற்றப்படும் தபால் அலுவலகம், மருதானை" எனக் குறிப்பிட்டு பெறப்பட்ட காசுக் கட்டளையை விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும். காசுக் கட்டளையின் புகைப்படப் பிரதி அனுப்பிவைத்தல் விண்ணப்பப்படிவத்தை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும்.

(v) விண்ணப்பப்படிவத்துடன் எவ்வித சான்றிதழோ கடிதங்களின் மூலப்பிரதியோ புகைப்படப் பிரதிகளோ அனுப்பிவைத்தல் கூடாது. அவ்வாறு அனுப்பிவைக்கப்படும் சான்றிதழ் பற்றி திணைக்களம் எவ்வித பொறுப்பும் ஏற்காது.

(vi) வெளி விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்பப்படிவத்தை உறுதிப்படுத்தல் அரச பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் பதவியை வகிக்கும் அல்லது அ. நி. சு. இலக்கம் 06/2006 இன்படி மாதாந்தம் ரூபா 19,755.00 ஆன ஆரம்ப சம்பளத்தைப் பெறும் அரச சேவையின் நிரந்தர பதவியை வகிக்கும் உத்தியோகத்தர்.

(vii) தற்போது அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் கையொப்பத்தை தமது கிட்டிய சேவைத் தலைவர் மூலம் உறுதிப் படுத்தல் வேண்டும். இவர்களின் விண்ணப்பப்படிவங்கள் திணைக்கள தலைவரினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

8. **சேவை நிபந்தனை**.- (i) II ஆம் வகுப்பு (ஆ) தர பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டாலும் இது மூன்று வருட கால பயிற்சிக்கு உட்பட்டதாகும். இப்பயிற்சிக் காலத்திற்குள்ளும் பயிற்சியின் இறுதியிலும் இடைக்கிடையே நடாத்தப்படும் பயிற்சியோடு சம்பந்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைபவர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்படுவதுடன் அப்பரீட்சை யில் சித்தியடையாத வெளி விண்ணப்பதாரிகளின் சேவை முடிவுறுத் தப்படும். தற்போது அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் பழைய பதவிக்கு மீண்டும் அனுப்பப்படுவர்.

(ii) II "ஆ" தர உத்தியோகத்தராக தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பயிற்சித் தேர்வில் சித்தியடைந்ததன் பின்பு 10 வருட காலம் இத்திணைக்களத்தில் சேவை புரிவதாகவும், அவ்வாறு செய்ய முடியாமல் போகுமிடத்து பயிற்சியை வழங்க செலவுசெய்த மற்றும் பெற்றுக்கொண்ட கொடுப்பனவுகள் யாவும் மீண்டும் செலுத்துவதாகவும் பயிற்சியை ஆரம்பித்து மூன்று மாதத்திற்குள் இணக்க ஒப்பந்தத்தில் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு செய்யாதவிடத்து தேர்ந்தெடுத்தல் இரத்துச்செய்யப்படும்.

சேவையில் ஈடுபடுத்தப்படும் நிபந்தனைகள்.- (i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். நியமிக்கப் படுபவர்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உதவித் தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் தாபனக்கோவை, நிதிப் பிரமாணம், திணைக்கள கட்டளைச் சட்ட திட்டங்கள், அரசினால் தற்போது வெளியிடப்பட்டுள்ள மற்றும் வெளியிடப்படும் கட்டளைகளுக்கும் சட்டதிட்டங்களுக்கும் கீழ்படிதல் வேண்டும்.

பி. பி. விஜேசேகர,
புகையிரத பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
கொழும் 10,
2009.11.06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை புகையிரதத் திணைக்களம்**

புகையிரத மேற்பார்வையாளர் முகாமைத்துவ சேவையின் .................................. பதவி

**'அ' பகுதி (விண்ணப்பப்படிவத்தின் 1 ஆம் பக்கம்)**

1. விண்ணப்பிக்கும் பதவி :----.
2. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

(சிங்களம்/தமிழ்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

3. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :----.

(சிங்களம்/தமிழ்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

4. நிரந்தர முகவரி :----.

(சிங்களம்/தமிழ்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

5. ஆண்/பெண் தன்மை பற்றி (பொருத்தமான கூட்டினுள் ✓ இடுக.) :

ஆண் ☐ பெண் ☐

6. வதிவிடம் :-
(i) கிராமசேவகர் பிரிவு :----.
(ii) பிரதேச செயலாளர் பிரிவு :----.
(iii) மாவட்டம் :----.

7. இனத் தொகுதி (பொருத்தமான கூட்டினுள் ✓ இடுக.)

| | | | |
|---|---|---|---|
| சிங்களம் | ☐ | இந்தியத் தமிழ் | ☐ |
| இலங்கைத் தமிழ் | ☐ | பறங்கியர் | ☐ |
| முஸ்லிம் | ☐ | மலாயர் | ☐ |
| வேறு | ☐ | | |

8. நீர் பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் (பொருத்தமான கூட்டி னுள் ✓ இடுக.)

சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

9. நீர் இலங்கைப் பிரசையாக கருதப்படுவது எவ்வாறு என்பது பற்றி-

பரம்பரை மூலம் ☐ பதிவு மூலம் ☐

**'ஆ' பகுதி (விண்ணப்பப்படிவத்தின் 2 ஆம் பக்கம்)**

1. (i) பிறந்த திகதி :----.

(ii) 2009.12.11 ஆந் திகதியன்று வயது :----.
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. கல்வித் தராதரம் :-

(i) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை – முதல் தடவை

வருடம் :----. சுட்டெண் :----.

மொழி மூலம் :----.

| இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| (i) | | |
| (ii) | | |
| (iii) | | |
| (iv) | | |
| (v) | | |
| (vi) | | |
| (vii) | | |
| (viii) | | |

(ii) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை – இரண்டாம் தடவை

வருடம் :----. சுட்டெண் :----.

மொழி மூலம் :----.

| இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| (i) | | |
| (ii) | | |
| (iii) | | |
| (iv) | | |
| (v) | | |
| (vi) | | |
| (vii) | | |
| (viii) | | |

(iii) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை

வருடம் :----. சுட்டெண் :----.

மொழி மூலம் :----.

| இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| (i) | | |
| (ii) | | |
| (iii) | | |
| (iv) | | |

***'இ' பகுதி (விண்ணப்பப்படிவத்தின் 3 ஆம் பக்கம்)***

(iv) தொழில்நுட்ப தராதரம் :----.

பயிற்சி நெறியின்/சான்றிதழின் பெயர் :----.
நிறுவனம் :----.
பெறப்பட்ட வருடம் :----.
பெற்ற தராதரம் :----.

4. நீர் நீதிமன்றத்தின் மூலம் ஏதாவது குற்றத்திற்காக தண்டனை பெற்றுள்ளீரா ? (பொருத்தமான கூட்டுக்குள் ✓ இடுக.)

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

*'இ' பகுதி*

(01) **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் தன்னால் வழங்கப் பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானதெனவும், சரியானதெனவும் அத்தகவல்கள் யாவும் பொய் யானதென அல்லது பிழையானதென நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு காணப்படுமிடத்து, நான் தகுதியற்றவராக கருதப்படுவதற்கும் நான் தனிப்பட்ட முறையில் ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

(ஆ) மேலுள்ள (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென நியமித்ததன் பின்பு தெரியவரு மிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் நான் தனிப்பட்ட முறையில் ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

(இ) ................................ தபால் அலுவலகத்தில் ரூபா 250 ஐ செலுத்திப் பெற்றுக்கொண்ட இலக்கம் ................................ ஐ உடைய காசுக் கட்டளையை இத்துடன் இணைத்து அனுப்புகிறேன்.

| காசுக் கட்டளையை இங்கே இணைக்கவும். |
|---|

(ஈ) நான் இப்பரீட்சை நிபந்தனைகளுக்கு உட்படுவதற்கு இணங்குகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

***(விண்ணப்பப்படிவத்தின் 4 ஆம் பக்கம்)***

(02) **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இவ்விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ..................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் இன்று என் முன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

(இறப்பர் இலச்சினையைப் பொறிக்கவும்)

*(03)* ***திணைக்கள தலைவரின் சான்றிதழ் :***

*(தற்போது அரச சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)*

*இவ்விண்ணப்பப்பத்தை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ............................................................. ஆந் திகதியிலிருந்து ............................................. ஆந் திகதி வரை ..................... ................................... ஆக கடமை புரிகின்றார். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை உள்ளது/இல்லை. அவரின் வேலை, நடத்தை, வேலைக்கு சமுகம் தரல் திருப்திகரமானதாகும்/ அதி திருப்திகர மானதாகும். அவர் புகையிரத திணைக்கள பதவிக்காக தேர்ந்தெடுக்கப் படுமிடத்து இத்திணைக்களத்திலிருந்து விடுவிப்பு செய்ய முடியும்/ முடியாது என தெரிவித்துக்கொள்கிறேன்.*

----,
*திணைக்கள தலைவரின் கையொப்பம்.*

*பெயர் :----.*
*பதவி :----.*
*முகவரி :----.*
*திகதி :----.*
*(இறப்பர் இலச்சினையைப் பொறிக்கவும்.)*

*11-560*

---

## திட்ட அமுலாக்கல் அமைச்சின்கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட கருத்திட்ட அலுவலர்களுக்கும் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களுக்குமான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2009

*திட்ட அமுலாக்கல் அமைச்சின்கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களுக்கும் மற்றும் கருத்திட்ட அலுவலர்களுக்கு மான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடத்தப்படுமெனவும், இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் கடைசித் திகதி 2009, திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி எனவும், அவர்கள் மூன்றாவது வருடாந்த சம்பள அளவுத்திட்டத்தை அடைவதற்கு முன் இப்பரீட்சையில் சித்தியடைய வேண்டுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

***2. பரீட்சைத் திட்டம்.*** *- கீழே தரப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய விதத்தில் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை அமைந்திருக்கும் :*

*(1) நிதிப் பிரமாணங்கள்/ அலுவலக முறைமைகள் (2 மணித்தியாலங்கள்) – 100 புள்ளிகள்*

*(2) ஆங்கில மொழி (1 மணி 30 நிமிடங்கள்) - 100 புள்ளிகள்*

***குறிப்பு.*** *- (அ) ஓர் உத்தியோகத்தர் தமது விருப்பப்படி ஒரே தடவையில் அல்லது பல தடவையில் சகல பாடங்களுக்கும் தோற்ற முடியும்.*

*(ஆ) ஒரு பரீட்சார்த்தி சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளையோ அல்லது அதற்கு கூடுதலாகவோ பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*(இ) இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.*

***3. பாடங்கள் :***

*(அ) நிதிப்பிரமாணங்கள்/ அலுவலக முறைமைகள் (2 மணித்தியாலங்கள்) (பாட இல. 01) : – 100 புள்ளிகள்*

*(1) இலங்கையின் அரசாங்க முகாமைத்துவக் கட்டமைப்பு*

*(2) நிதி கட்டுப்பாடும், வருடாந்த மதிப்பீடுகளும்*

*(3) தாபனக்கோவையின் கட்டளைகளும், நிதிப்பிரமாணங்களும்*

*தாபனக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் உள்ளடக்கப்படும் :*
I, II, IV, V, VII, IX, XII, XV, XXIII, XXVI, XXVII, XXX, XXXI, XXXII, XXXIII
*அரசாங்க நிதிப் பிரமாணங்களின் 1 ஆவது பாகம் (X ஆவது அத்தியாயம் தவிர்ந்த)*

*(4) அலுவலக முகாமைத்துவம்*

*(ஆ) ஆங்கில மொழி (1 மணி 30 நிமிடங்கள்) (பாட இல. 02) - 100 புள்ளிகள்*

*அபிவிருத்தி அலுவலர்கள் தங்களது கடமைகளைச் செய்வதற்குத் தேவையான ஆங்கில அறிவைப் பரிசோதிக்கும் விதத்தில் இந்த வினாத்தாள் வடிவமைக்கப்படும். க. பொ. த. சாதாரண தர வினாத்தாள்களுக்குச் சமமான விதத்திலும், மொழி, அறிவு, கட்டுரை எழுதுதல், சுருக்கி எழுதுதல், இலக்கணம், கிரகித்தல் என்பன உள்ளடக்கிய விதத்திலும் இந்த வினாத்தாள் அமைந்திருக்கும்.*

*ஆங்கில மொழிக்கான விதிவிலக்கு அளித்தல்.- க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில மொழிப்பாடத்தில் சித்தியடைந்த அலுவலர்களுக்கு முதலாம் வினைதிறமை காண் தடைப் பரீட்சைக்குத் தேவையான ஆங்கில மொழிப் பரீட்சைக்கான விதிவிலக்கு அளித்தல் வழங்கப்படும்.*

***4. தகைமைகள்.*** *- இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு திட்ட அமுலாக்கல் அமைச்சின்கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட சகல அபிவிருத்தி அலுவலர்களும் மற்றும் கருத்திட்ட அலுவலர்களும் தகுதியுடையவராவார்கள்.*

***5. விண்ணப்பிக்கும் முறை.*** *- (அ) இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம், ஒரு ஏ4 அளவுத் தாளில் இரு பக்கத்தையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இலக்கம் 01 இலிருந்து 07 வரையிலான விபரங்கள் முதல் பக்கத்திலும், 08 இலிருந்து மிகுதி விபரங்கள் இரண்டாவது பக்கத்திலும் வரும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தினால் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்திசெய்தல் வேண்டும்.*

*மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அமையாத விண்ணப்பங்களும் மற்றும் முறையாக பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பத்தின் பிரதி ஒன்றினை தன்னுடன் வைத்துக்கொள்வது*

பயனுள்ளதாக இருக்கும்.) மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். அன்றேல் அவை நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்குமிடத்து விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு மற்றும் பரீட்சையின் பெயர் ஆகியவை சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பங்களில் ஆங்கிலத்திலேயே இடம்பெற வேண்டும்.

(ஆ) பரீட்சைக் கட்டணம்.- பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பின்வரும் பரீட்சைக் கட்டணங்கள் அறவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

| பரீட்சைக் கட்டணம் | | ரூபா | சதம் |
|---|---|---|---|
| (அ) முதற்தடவை தோற்றுவதற்கு | - | இலவசம் | |
| (ஆ) முதற் தடவையின் பின்னர் ஒவ்வோர் அமர்வுக்கும் முழுப்பரீட்சைக்கும் | - | 115 | 0 |
| (இ) ஒரு பாடத்திற்கு | - | 75 | 0 |

பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-20-13 வருமான தலைப்பிற்கு வைப்புச் செய்து இலங்கையிலுள்ள எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணபத்தில் நன்றாக ஒட்டிவிடுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் போட்டோ கொப்பி பிரதி ஒன்றினை தம்முடன் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.)

(இ) விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களுக்கூடாக 2009, திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக ''பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சை கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். (பற்றுச்சீட்டின் போட்டோ கொப்பி பிரதி ஒன்றினை தம்முடன் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.)

(ஈ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழியிலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். அன்றேல் நிராகரிக்கப்படும்.

(உ) பொருத்தமான வடிவமைப்புக்கு அப்பாற்பட்டதும், எல்லா தகவல்களையும் கொண்டிராததும், பிந்தி வந்தடைகின்ற விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் அஞ்சலில் தொலைந்ததாகவோ, தாமதித்ததாகவோ செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் எடுக்கப்பட மாட்டா.

6. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சார்த்திகள் யாவருக்கும் நேரசூசிகளுடன் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை அனுப்பியவுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களம் அது தொடர்பாக பத்திரிகையில் அறிவிப்பு ஒன்றை வெளியிடும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்திய நிழற்பட பிரதிகள், பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்பிற்கு வெளி இடம் என்றால் அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய பெக்ஸ் இலக்கம் குறிப்பிட்ட உங்களது கோரிக்கையின் நிழற்பட பிரதி என்பவற்றை தம்வசம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

7. **அடையாள அட்டை**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் (ஒவ்வொரு பாடத்தின்போதும்) பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு.

மேற்கூறிய ஆவணங்களில் எதனையும் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரியின் தகைமையை இரத்து செய்யும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பரீட்சை ஆணையாளருக்கு உண்டு. அத்துடன் பரீட்சை ஆரம்பமாகும் தினத்தன்று உறுதிப்படுத்தப்பட்ட கையொப்பத்துடன் கூடிய அனுமதிப்பத்திரம் மேற்பார்வையாளரிடம் கையளிக்கப்பட வேண்டும்.

8. இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெற்றவர்கள் மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட திணைக்கள/ நிறுவனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும் பரீட்சைக்குச் சமுகமளிப்பதற்குக் கடமை விடுதலை வழங்குமாறு திணைக்கள/ நிறுவனத் தலைவர்கள் வேண்டப்படுகின்றார்கள். பரீட்சை ஆணையாளர் விதிக்கும் அனைத்து சட்டங்களுக்கும் விதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர். அவ்வாறான சட்டம் மற்றும் விதி மீறப்படுமாயின் பரீட்சை ஆணையாளர் மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளுக்கு பரீட்சார்த்தி முகம் கொடுக்க வேண்டியிருக்கும்.

9. இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயமும் இந்த அமைச்சின் தற்றுணிவின்படி முடிவு செய்யப்படும்.

தாரா விஜேதிலக,
செயலாளர்,
திட்ட அமுலாக்கல் அமைச்சு.

டவர் 5, தட்டு 12,
''மத்திய வங்கி கட்டிடம்'',
இல. 30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**திட்ட அமுலாக்கல் அமைச்சின்கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட கருத்திட்ட அலுவலர்களுக்கும் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களுக்குமான முதலாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2009**

First Efficiency Bar Examination for Development Officer & Project Officers Recruited under the Ministry of Plan Implementation – 2009

**குறிப்பு**.- இப்படிவம் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும், தெளிவாகவும் நிரப்பப்படல் வேண்டும்.

(அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
(சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4)
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும். இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

1. (i) விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன், முதலெழுத்துக்கள் கடைசியில் (ஆங்கில பெரிய எழுத்துக்கள்) உதாரணம் : SAMAN, S. A.) : ----.
(ii) விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் (சிங்களத்தில்/தமிழில்) :----.
(iii) முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :----.
(iv) முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2. (i) அலுவலகத்தின் முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ii) பிரவேச அட்டை அனுப்பவேண்டிய முகவரி (பெரிய ஆங்கில எழுத்தில்) :----.

3. பிறந்த திகதி :

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

4. கருத்திட்ட/ அபிவிருத்தி அலுவலர்களாக கடமையேற்ற திகதி (கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்ட சரியான திகதியைக் குறிப்பிடுக.) :----.

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

5. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின்கீழ் விண்ணப்பிக்கும் பாடங்கள் :-

(i) பாடம் :----. பாட இலக்கம் | |

(ii) பாடம் :----. பாட இலக்கம் | |

6. நீங்கள் முதற் தடவையாக இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்றீர்களா ? :----.

7. முதல் தடவையாக இல்லாவிட்டால், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்.-

(பரீட்சையின் முழுக்கட்டணம் ரூபா 115. ஒரு பாடத்திற்கு கட்டணம் ரூபா 75. பரீட்சை ஆணையாளருக்கு 2003-20-13 வருமான தலைப்பில் வைப்புச் செய்து இலங்கையிலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியை தன்னுடன் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.)

| பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். |
|---|

8. நான் அளித்துள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேற்குறிப்பிட்ட 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையேன் என்றும், பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்படுவேன் என்றும் நான் உறுதி செய்கின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்தகைய திணைக்களத் தலைவர் சார்பாகக் கையொப்பமிட அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர் அல்லது தனது உள்ளூர் தலைவர் முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும்.

9. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
திரு./திருமதி/செல்வி .................................................. எனது அலுவலகத்தில் ஓர் உத்தியோகத்தர் என்றும், அவரை எனக்கு நன்கு தெரியும் என்றும், அவர் 2009 ஆம் ஆண்டு .......................... மாதம் ........................ ஆந் திகதியன்று என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.)

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.

10. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

(i) மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் செவ்வை பார்க்கப் பட்டுச் சரியாக இருக்கக் காணப்பட்டன என்றும்,
(ii) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றத் தகைமையுடையவர் என்றும்,
(iii) பரீட்சார்த்தி சரியான பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை இத்துடன் இணைத்துள்ளார் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்).

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.

11-590

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.